**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.04.2026**
**OS. No. 66/2023**
**வழக்கு சாட்சி PW.1– ரமேஷ், த/பெ.மாரிசெட்டி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

11) நான் ச.எண்.282/4B ல் குடியுள்ளேன். நான் குடியுள்ளது எனது சொந்த வீடா என்றால் ஆமாம். இதே சர்வே எண்ணில் என் வீட்டிற்கு அருகாமையில் போர்வெல் அமைத்து அதிலிருந்து தண்ணீர் எடுத்து எனது வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். ச.எண்.282/4J ன் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் எனக்கு தெரியவில்லை. ச.எண்.282/4J ஆனது தற்போது உட்பிரிவு ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. ச.எண்.282/4J என்பது பழைய அ–பதிவேட்டில் 1 ஏக்கர் என்று குறிப்பிட்டு மோகன் மற்றும் இரண்டு நபர்கள் என்று உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது ஓலைப்பட்டி கிராம ச.எண்.282/4J க்கான அ–பதிவேடு என்றால் அதில் அவ்வாறு தான் உள்ளது எனக்கு தெரியவில்லை.

12) மேற்படி அ–பதிவேட்டில் ச.எண்.282/4J வின் மொத்த பரப்பளபு 71 ஹெக்டேர் என்று உள்ளது என்றால் எனக்கு ஹெக்டேர் கணக்கு தெரியாது. ச.எண்.282/4J வின் மொத்த பரப்பில் எந்த இடத்தில் கிணறு உள்ளது என்று காண்பிக்க வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–4 புலவரைபடத்தில் ச.எண்.282/4J1 என்றும், ச.எண்.282/4J2 என்றும் உட்பிரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.282/4J2 க்கும் கிழபுறமாக ச.எண்.282/4J1 அமைந்துள்ளவாறு அதில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) என் வழக்கில் ச.எண்.282/4J1 ல் கிணறு உள்ளதாகதான் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். ச.எண்.282/4J1 என்பது ச.எண்.282/4J2 க்கு செல்லக்கூடிய

கிழபுறமாக வடக்கு தெற்காக செல்லும் பாதை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ச.எண்.282/4J1ல் எந்த சேந்து கிணறும் இல்லை என்றும், மக்கள் யாரும் அவ்வாறு ஒரு கிணறை பயன்படுத்துவதில்லை என்றும், அது பாதை என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும், ச.எண்.282/4Jக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வெவ்வேறு இடங்களில் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. நான் 5ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தான் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை, அனைத்து பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தான் பரிகாரம் கோரியுள்ளேன்.

14) ச.எண்.282/4J2ல் 5ம் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை என்றால் உட்பிரிவு செய்யப்பட்டதே நீதிமன்ற குறுக்கு விசாரணையில் தான் தெரிந்துகொண்டேன். எனக்கு எழுதி வைத்தத உயில் சம்மந்தமாக உண்மை தன்மை கண்டறிய மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் புரோபேட் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு உயில் எழுதி வைத்த மல்லக்காளுக்கே பி.வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தில் ச.எண்.282/4Jல் எவ்வித உரிமையும் இல்லாத சமயத்தில் அவர் எனக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தில் ச.எண்.282/4J என்று குறிப்பிட்டுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

15) பிரதிவாதிகளை தொந்தரவு செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு என் தந்தையின் மூலம் உறுவாக்கப்பட்ட உயிலில் ச.எண்.282/4Jவை நாங்களே சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. என் பாட்டி மல்லக்காள் படிப்பறிவு இல்லாதவர் என்பதால் அவரை ஏமாற்றி அவரது சம்மதம் இல்லாமலேயே அவருக்கே உரிமையில்லாத ச.எண்.282/4J பொறுத்து ஒரு மோசடியான உயில் ஆவணம் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

16) 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை பொறுத்து அவரிடம் எந்த ஒரு உரிமையும் கேட்க எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தில் வீடும் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் கண்ட சொத்தை தவறுதலாக இந்த வழக்கில் காண்பித்து பரிகாரம் கேட்கிறேன் என்றால் சரியல்ல.

17) பிரதிவாதிகளை பொறுத்தமட்டில் சொத்து விவரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ச.எண்.282/4 ல் கண்டுள்ள 1 ஏக்கர் நிலம், அதில் கட்டப்பட்டுள்ள வீடுகளை பொறுத்து எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், ஆனால் ச.எண்.282/4J1 ஐ பொறுத்தவரையில் நான் குறிப்பிட்டுள்ளவாறு எந்த கிணறும் இல்லை என்றும், அது பாதையாக தான் உள்ளது என்றும், நான் வேண்டுமென்றே 5 ம் பிரதிவாதியை தொந்தரவு செய்யவேண்டும் என்பதற்காக அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட ச.எண்.282/4J2 என்ற நிலத்தையும், அதிலுள்ள வீடு, கிணறு ஆகியவற்றை தொந்தரவு செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தொடர்பாக நான் எதையும் தெளிவுபடுத்தாததால் ச.எண்.282/4J வை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.